# தகவல் தாள் - உடனடி பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு

### உடனடி பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு என்ன செய்யும்?

பள்ளி முதல்வர்கள் மற்றும் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் ஊழியர்கள் போன்ற சில நபர்கள் 'அங்கீகரிக்கப்பட்ட நபர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்கள் பள்ளிக்குச் செல்லும்போது அல்லது அதில் ஈடுபடும்போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை அமைக்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்க இவர்களுக்கு அதிகாரம் உள்ளது.

ஓர் உத்தரவானது, பள்ளி மைதானங்களில் அல்லது பள்ளியின் செயல்பாடுகள் நடைபெறும் மற்ற இடங்களுக்குள் நுழைய விடாமல் அல்லது அங்கு இருக்க விடாமல் உங்களைத் தடுத்து நிறுத்துகிறது. ஆர்டர் பொருந்தாத நேரங்கள் அல்லது பகுதிகள் போன்ற விவரங்கள் ஆர்டரில் இருக்கலாம்.

பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவு பற்றிய மேலதிகத் தகவல்களை இங்கே காணலாம். பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவுகள் என்ன செய்யும் என்பதைப் புரிந்துகொள்ள உதவும் வீடியோவை இங்கே காணலாம்.

### உடனடி உத்தரவு எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும்?

இந்த விதிகள் எவ்வளவு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்பதையும் இந்த உத்தரவு உங்களுக்குத் தெரிவிக்கிறது. ஓர் உத்தரவு நடைமுறையில் இருக்கும் அதிகபட்ச கால அளவு 14 நாட்கள் ஆகும்.

### எனது பிள்ளை பள்ளியில் படிக்கிறார் என்றால், நான் இந்த நடைமுறையில் இருக்கும் உத்தரவைப் பின்பற்ற வேண்டியுள்ளதால் அவர்களுக்கு என்ன நடக்கும்?

இந்த உத்தரவு உங்கள் பிள்ளையை எவ்வாறு பாதிக்கும் மற்றும் நீங்கள் அவர்களை எவ்வாறு கவனித்துக்கொள்கிறீர்கள் என்பதைப் பற்றி உங்கள் பள்ளி கவனமாகச் சிந்தித்துள்ளது. நீங்கள் அவர்களைக்

கவனித்துக்கொள்வதற்கும் அல்லது அவர்களின் கல்வியில் ஈடுபடுவதற்கும் இந்த உத்தரவு தடையாக இருக்காது.

உங்கள் பள்ளி உங்களுக்கு ஒரு உத்தரவை வழங்கியவுடன் கூடிய விரைவில் அதற்கான 'தொடர்புகள் மற்றும் அணுகல் நெறிமுறையை'உங்களுக்கு வழங்கும். இது பின்வரும் விஷயங்களை நெறிமுறைப்படுத்தும்:

- உங்கள் பிள்ளையின் கல்வி விஷயங்கள் பற்றி உங்களுக்குச் சொல்லப்படும் முறை
- உங்கள் பிள்ளை எப்படி பள்ளிக்குச் சென்று பள்ளி நடவடிக்கைகளில் பாதுகாப்பாகப் பங்கேற்கலாம்
- உங்கள் பிள்ளைக்கு ஆதரவு வழங்கப்படுவதையும் கவனிப்பு வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த அவர்கள் என்ன செய்வார்கள்.

**உடனடி உத்தரவை நான் ஏற்கவில்லை என்றால் என்னவாகும்?**

உத்தரவைப் பிறப்பித்த அங்கீகரிக்கப்பட்ட நபர், 'நடைமுறையில் இருக்கும் பள்ளிச் சமூகப் பாதுகாப்பு உத்தரவை' பிறப்பிக்க வேண்டுமா அல்லது உத்தரவை ரத்து செய்ய வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க, தாங்கள் பிறப்பித்த உத்தரவை உடனடியாக மதிப்பாய்வு செய்ய வேண்டும். நடைமுறையில் இருக்கும் உத்தரவுகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களை கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்தில் இங்கே காணலாம்.

நீங்கள் ஏன் அந்த வகையில் நடந்துக் கொண்டீர்கள், அது உங்களையோ உங்கள் பிள்ளையையோ எவ்வாறு பாதிக்கும் என்பதை அல்லது அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விஷயங்களை விளக்குவதற்கு நீங்கள் எந்த நேரத்திலும் சமர்ப்பிப்பை மேற்கொள்ளலாம். உதாரணமாக, உங்கள் பிள்ளைக்கு இயலாமை இருக்கிறது என்பதை நீங்கள் பள்ளியிடம் சொல்லலாம், எனவே நீங்கள் தொடர்ந்து பள்ளிக்குச் சென்று அவர்களுக்கு உதவியாக இருப்பதை அவர்களால் உறுதிசெய்ய முடியும்.

எழுத்து மூலமான சமர்ப்பிப்பை அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு மின்னஞ்சல் மூலமாகவோ கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். நீங்கள் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்தில் உள்ள வார்ப்புருவைப் பயன்படுத்தலாம், அதற்கான இணைப்பு இதோ இங்கே.

நீங்கள் எழுத்து மூலமான சமர்ப்பிப்பை மேற்கொள்ள விரும்பவில்லை என்றால், அதற்குப் பதிலாக வாய்மொழி சமர்ப்பிப்பை வழங்க அனுமதிக்குமாறு கேட்கலாம். இயலாமை காரணமாக உங்களின் உதவியாளர் அல்லது மொழிபெயர்ப்பாளர் உங்களுக்காக சமர்ப்பிப்பு செய்வதை ஏற்றுக்கொள்ளுமாறும் நீங்கள் அவர்களிடம் கேட்கலாம்.

## நான் உத்தரவைப் பின்பற்றவில்லை என்றால் என்ன நடக்கும்?

உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை நீங்கள் பின்பற்றவில்லை என்றால், உங்களை உத்தரவைப் பின்பற்ற வைக்கும் வகையில் பள்ளியானது குற்றவியல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம்.

நீங்கள் உத்தரவைப் பின்பற்றாமல் தவறு செய்துள்ளீர்கள் என்று குற்றவியல் நீதிமன்றம் கண்டறிந்தால், அவர்கள்:

- உங்களை அபராதம் செலுத்தச் சொல்லலாம்
- உத்தரவுக்கு இணங்கி நடக்கும்படி ஆணையிடலாம்
- உத்தரவுக்கு இணங்கி நடக்க குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்குமாறு சொல்லலாம்
- பொருத்தமானது என்று நீதிமன்றம் நினைக்கும் வேறு எதையும் செய்யச் சொல்லலாம்

உத்தரவைப் பின்பற்றாததற்காக நீங்கள் சிறையில் அடைக்கப்பட மாட்டீர்கள், உங்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்படாது அல்லது நீங்கள் குற்றவியல் தண்டனையைப் பெற மாட்டீர்கள்.

## எனக்கு மொழிபெயர்ப்பாளர் அல்லது பிற உதவி தேவைப்பட்டால் என்ன செய்வது?

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் அல்லது உதவியாளர் தேவைப்பட்டால், பள்ளி முதல்வரிடம் தெரிவிக்கலாம்; அவர் உங்களுக்குத் தேவையான ஆதரவை ஏற்பாடு செய்வார்.

உங்கள் பிள்ளை அரசுப் பள்ளிக்குச் சென்றால், மேலதிக உதவிக்கு கல்வி மற்றும் பயிற்சித் துறையின் பிராந்திய அலுவலகத்தையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| வடகிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 231<br>மின்னஞ்சல்: nevr@education.vic.gov.au | வடமேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 691<br>மின்னஞ்சல்: nwvr@education.vic.gov.au |
| தென்கிழக்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 338 738<br>மின்னஞ்சல்: sevr@education.vic.gov.au | தென் மேற்கு விக்டோரியா<br>தொலைபேசி: 1300 333 232<br>மின்னஞ்சல்: swvr@education.vic.gov.au |

## எனக்கு மேலதிகத் தகவல் தேவைப்பட்டால் எங்கே பெறுவது?

மேலதிகத் தகவலைப் பெற, கல்வி மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்திற்கு செல்ல இங்கே கிளிக் செய்யவும்.